ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2057/3 - 2018 පෙබරවාරි මස 05 වැනි සඳුදා - 2018.02.05
2057/3 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) திருத்தப்பட்ட வாரான காணி எடுத்தற் சட்டம் (460 ஆம் அத்தியாயம்)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*எனது குறிப்பு* : DEV/LND/02/ACQVI/04-24.

ஒரு பகிரங்கத் தேவைக்காக கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசு எண்ணியிருக்கின்றது என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டம் (460 ஆம் அத்தியாயம்) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் தெவுந்தறைப் பிரதேச செயலகப் பிரிவின் தலல்ல வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் நாஒடுன்ன கிராமத்தில் அமைந்துள்ளதும் ஆரம்பப் பட இலக்கம் மாற/2778 இல் துண்டு இலக்கம் 01 எனப்படும் காணித் துண்டின் எல்லைகள் (விஸ்தீரணம் 2.8578 ஹெக்டயார்) ஆகும்.

1. காணித் துண்டு இல.: 01
காணியின் பெயர் :கொடஉடஹேன, கல்கட்டாவேஹேன அல்லது கல்கட்டாவ; விபரம்: தோட்டம் 20-25 வரையான வயதுடைய பலா மரம், 7,15 - 20 வரையான வயதுடைய தேக்க மரம் கருவா உட்பட கலப்புப் பயிச் செய்கைகளைக் கொண்டது; விஸ்தீரணம்: 2.8578 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு தெவுந்தறைப் பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் மற்றும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணிக்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட முறையினையும் எழுத்து மூலமாக இரு பிரதிகளாக 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் என்னிடம் அறிவிக்கும்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ரன்ஜித் யாப்பா,
காணி கொள்வனவு உத்தியோகத்தர்,
பிரதேச செயலாளர்,
தெவுந்தறை.

பிரதேச செயலகம்,
தெவுந்தறை,
2018,சனவரி 25.

2 – 606


*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (460 ஆம் அத்தியாயம்)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*எனது இலக்கம்* : KDS/GIK/4/4/34.
*காணி அமைச்சின் கோப்பு இலக்கம்*: 4-3/5/2015/ CEB/32.

2017 நவெம்பர் மாதம் 27 ஆந் திகதிய மற்றும் 2047/3 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட அறிவித்தலில் எடுப்பதற்காக எதிர்பார்க்கும் காணிதொடர்பான விபரங்களின் வரிசையின் கீழுள்ள மஹ 6726 மூல வரைபடத்தில் காணித் துண்டு இல. 01 என்ற வகையில் குறிப்பிடப்பட்டு உள்ள காணித் துண்டிற்குரிய காணி உரித்தாளரின் பெயர் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள வகையில் திருத்தப்படுதல் வேண்டும்.

உரிமைகோருபவர்: நதீஷானி தக்ஷிலா சமரசிங்ஹ.

கே. ஜீ.லெனரோல்,
பிரதேச செயலாளர்,
கங்க இஹல கோரலே.

கங்க இஹல கோரலே பிரதேச செயலகம்,
2018, சனவரி 30.

2 - 607

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.